# மார்ச்



# 3. நேர்மையாளரின் பாதை

## முன்னுரை

மார்ச் மாதம் கொண்டாடப்படுகிற திருவிழாக்களில் ஒன்று புனித யோசேப்பின் திருவிழா. அனைத்துலக திரு அவையின் பாதுகாவலரான இந்த மாபெரும் புனிதரின் திருவிழா வருடம் தவறாமல் தவக்காலத்தில்தான் வருகிறது. விமரிசையாகக் கொண்டாட முடியாத ஒரு விழாவாக இவரது திருவிழா அமைந்து விடுகிறதே என்று எண்ணத் தோன்றுகிற நமக்கு அவரது வாழ்வே பதிலாக அமைகிறது. அவரது வாழ்வே ஒரு தவமாக, சிலுவைப் பாதையாகத்தான் அமைந்தது எனலாம். இயேசுவின் பாடுகளில் அன்னை மரியா உடனிருந்தார் என்பதும், உள்ளத்தில் ஊடுருவக் குத்தப்பட்டார் என்பதும் மறுக்க முடியா உண்மைகள். புனித யோசேப்பு அந்த வகையில் இயேசுவின் சிலுவைப் பாதையில் பங்கெடுக்கவில்லையென்றாலும், யோசேப்பின் வாழ்வில் இயேசுவின் துயரப்பதிவுகள் இருந்ததையும், இயேசுவின் மனநிலை இருந்ததையும் ஆழ்ந்து தியானித்தால் நாம் புரிந்து கொள்ள முடியும். நேர்மையாளராய் வாழ முற்படும் எவருக்கும் இயேசுவின் சிலுவைப்பாதையே வாழ்க்கைப் பாதையாக இருக்க முடியும் என்பதை உணர்ந்தவர்களாய் இயேசுவின் பாதையில் தூய யோசேப்புடன் பயணிப்போம்.

◆

✦ முதல் நிலை

# நிறைநீதி நோக்கி நகர்வோம்

இயேசுவுக்கு வழங்கப்பட்ட அநியாயமான தீர்ப்பு நேர்மையாளர்களின் வாழ்க்கைப் பாதை கடினமாகத்தான் இருக்கும் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஆயினும் நேர்மையாளர்கள்தான் இறுதியில் வெற்றி வாகை சூடுவர் என்பதையும் பொல்லார் பழிச்சொல்லுக்குத்தான் ஆளாவர் என்பதையும் தெளிவாகவே எடுத்தியம்புகிறது.

தமது பாடுகளின் போதும், விசாரணையின்போதும் பெரும்பாலும் அமைதியே காத்த இயேசுவைப்போலவே புனித யோசேப்பும் தம் வாழ்வில் அமைதி காத்து வந்தார். திருவிவிலியம் முழுவதும் அவர் பேசியதாக ஒரு வார்த்தைகூட இல்லை. திருவிவிலியமும் அவரைக் குறித்து அதிகம் பேசவில்லை. “யோசேப்பு நேர்மையாளர்” (மத். 1:19) என்று மட்டுமே குறிப்பிடுகிறது. பிலாத்துவுக்கு முன் இயேசு நின்றிருந்தபோது, பிலாத்துவின் மனைவி ஆளனுப்பி “அந்த நேர்மையாளரின் வழக்கில் நீர் தலையிட வேண்டாம்” (மத். 27:19) எனக் கூறுவதைக் காண்கிறோம். யோசேப்புக்கு அடைமொழியாய் சொல்லப்பட்ட “நேர்மையாளர்” என்கிற அதே சொல்லாடல் இயேசுவுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

விவிலியப் பின்னணியின்படி “நேர்மையாளர்” என்கிற பதம் ‘நீதி வழுவாதவர், வாய்மை தவறாதவர்’ என்பதை மட்டுமல்ல, இறைவனுக்கு அஞ்சி நிறைவாழ்வு வாழ்கிறவர் என்பதையே குறிக்கிறது. இயேசுவும், புனிதயோசேப்பும் நிறைநீதியைக் கடைபிடித்ததை நம்மால் காணமுடிகிறது. மரியாவின் கர்ப்பம் குறித்து கேள்விப்பட்ட யோசேப்பு அதனை அணுகிய விதமும், விபச்சாரத்தில் பிடிபட்டப் பெண்ணை இயேசு கையாண்ட விதமும் நிறைநீதி என்பது சட்டத்தை கையில் எடுத்தோ, கை கழுவியோ பழிதீர்க்கும் நீதி அல்ல. மாறாக, அது பரிவும் கனிவும் கலந்த நீதி என்பதை நிரூபணம் செய்கின்றது. தங்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறபோதும் நேர்மையாளர்கள் அமைதி காப்பார்களேயன்றி ஆர்ப்பாட்டம் செய்வதில்லை. நாம் எப்படிப்பட்டவர்கள்? அமைதி காக்கத் தெரிந்தவர்களா? பழி தீர்க்கத் துடிப்பவர்களா? நிறைநீதி நோக்கி நகர்கிறவர்களா என சிந்திப்போம்.

**செபம்**

இறைவா! நெறிபிறழா அமைதியான வாழ்வை வாழவும், நிறைநீதி நோக்கி நகரவும் எங்களுக்கு அருள் தாரும்.

# ஏற்றுக் கொள்ளும் துணிவு பெறுவோம்

இறைமகனாம் இயேசு பாரமானச் சிலுவையைத் துணிவுடன் ஏற்றுக்கொள்ளுகிற விதம் நேர்மையாளர்கள் சில சமயங்களில் சவால்களையும், தேவையற்ற சுமைகளையும் சுமக்கத்தான் வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

யோசேப்பு என்கின்ற நேர்மையாளரின் வாழ்வில் எல்லாம் சாதாரணமாகவும், சுமூகமாகவும்தான் நகர்ந்து கொண்டிருந்தன. ஏன் திருமண ஒப்பந்தம்கூட ஆகியிருந்தது. ஆனால் திடீரென்று முளைத்தது ஒரு தேவையற்ற பிரச்சனை. தனக்கு மனைவியாகப் போகிற மரியா கருவுற்றிருக்கிறார் என்கிற சிக்கலான சூழ்நிலை.

குற்றம் சாட்டப்பட்டவராய் தம் முன் நின்று கொண்டிருந்த இயேசுவைக் குறித்து "இவனிடம் நான் குற்றம் ஒன்றும் காணவில்லை" (லூக். 23:4) என்று பிலாத்துவே ஒத்துக்கொண்டார். ஆக இயேசுவின் மீது சுமத்தப்பட்ட சிலுவை அவருக்குரிய தண்டனையல்ல, அது அவர் சுமக்க வேண்டிய சிலுவையும் அல்ல. இயேசுவும் யோசேப்பும் தேவையற்ற பிரச்சனைகளை சுமக்க நேரிடுகிறது.

"ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி 'யோசேப்பே, தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக் கொள்ள அஞ்சவேண்டாம்" (மத். 1:20) என்று சொன்னதும் யோசேப்பு "இதோ ஆண்டவரின் அடிமை, உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும்" என மரியா சொன்னது போல, வார்த்தைகளால் சொல்லவில்லை, செயலில் செய்து காட்டுகிறார். இறைவனின் சித்தத்தை ஏற்றுக்கொள்கிறார்.

இயேசுவும் தாம் பாடுபடுவதற்கு முந்தைய இரவில் அந்தத் துன்பக்கலம் தன்னை விட்டு நீங்கவேண்டும் என

விரும்பினாலும், இறுதியில் “என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்” (லூக். 22:42) என இறை சித்தத்தை ஏற்றுக்கொள்வதைப் பார்க்கின்றோம். “அப்போது, விண்ணகத்திலிருந்து ஒரு தூதர் அவருக்குத் தோன்றி அவரை வலுப்படுத்தினார். (லூக். 22:43) என்பதையும் விவிலியம் பதிவு செய்கிறது.

மனிதரால் ஏற்றுக்கொள்ள முடியாத, தேவையற்றச் சுமைகளையும் நேர்மையாளர்கள் இறைச்சித்தம் என ஏற்றுக் கொள்வார்கள். அதற்கானத் தெளிவும், துணிவும் அவர்களுக்கு மேலிருந்து அருளப்படும். நமக்கு அத்தகைய மனநிலை உள்ளதா?

### செபம்

இறைவா, இறைத் திருவுளத்தை துணிவுடன் ஏற்கவும், அதனால் ஏற்படுகிற சவால்களை உறுதியோடு சந்திக்கவும் எங்களுக்கு அருள்தாரும்.

◆

✦ <u>மூன்றாம் நிலை</u>

## எதிர்கொள்ளும் ஆற்றல் பெறுவோம்

விழுவது மனித இயல்பு. பொல்லாரையும், நல்லோரையும் தரம் பிரித்துக் காட்டுவது அவர்கள் எழுகின்ற விதம்தான். விழுந்து கிடப்பதிலே சுகம் காண்பவன் கயவன். விழுகிற ஒவ்வொரு முறையும் எழுபவன் புனிதன்.

சிலுவைப்பாதையின்போது இயேசு மூன்று முறை விழுந்தாரா? மூன்று முறைதான் விழுந்தாரா என்பதெல்லாம் அவசியமற்ற கேள்விகள். ஆனால், விழுந்த ஒவ்வொரு முறையும் எழுந்தார் என்பது திண்ணம். திருவிவிலியம் யோசேப்பு குறித்து தருகிற மிகச் சொற்ப தகவல்களின்படி அவரும் மூன்றுமுறை எழுந்ததாகப் பார்க்கிறோம். முதல்முறை

அவர் சந்தேகத்தில் விழுகிறார்; உறக்கத்திலும் விழுகிறார். விழுந்த யோசேப்பிடம் இறைவனின் தூதர் கனவின் மூலம் பேசுகிறார். விவிலியம் கூறுகிறது, "யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவரின் தூதர் தமக்குப் பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார் (மத். 1:24)

சோதனைகளை எதிர்கொள்வதற்கான உறுதியான உத்தி இறைவார்த்தைக்கு செவிமடுத்து, பணிக்கப்பட்டவாறே செயல்படுவது தான். தமது பொது வாழ்வைத் தொடங்குவதற்கு முன் இயேசு எதிர்கொண்ட சோதனைகள் மூன்று. அவற்றில் முதல் சோதனையை இயேசு எதிர்கொண்டதும் இப்படித்தான். கற்களை அப்பமாக மாற்ற அலகையால் தூண்டப்பட்டபோது இயேசு "மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்" (மத். 4:4) என இறை வார்த்தையை மேற்கோள் காட்டி சோதனையை வெல்கிறார்.

உலகமும், அலகையும் நம்மைப் பலவற்றைச் செய்யப் பணிக்கலாம். அவற்றுள் பல நல்லவை போலக்கூட தோன்றலாம். நாமோ விழுந்து விடாமல் இருக்க, கடவுளின் வாய்ச்சொல் பணிப்பவற்றை மட்டுமே செய்திடல் வேண்டும். அப்போது தான் எதிரிகளையும், எதிர்ப்புகளையும் நம்மால் நயமாக எதிர்கொள்ள முடியும். வாழ்வில் சறுக்காமலும் இருக்க முடியும். இறைவார்த்தைக்கு செவிமடுத்து இறைவன் பணிப்பவற்றை மட்டுமே செய்கிற மனப்பாங்கு நம்மிடம் உள்ளதா? எனச் சிந்திப்போம்.

## செபம்

இறைவா! இறைவார்த்தை எனும் ஆயுதத்தைப் பயன்படுத்தி, சோதனைகளை எதிர்கொள்ளும் ஆற்றலை எங்களுக்குத் தந்தருளும்.

◆

# உணர்ச்சிகளை வென்றிடப் பயில்வோம்

கல்வாரிப் பாதையில் இயேசுவும் மரியாவும் சந்தித்துக் கொள்கிறார்கள். அங்கே உணர்ச்சிகள் ஓரங்கட்டப்படுகின்றன. இருவரும் தங்கள் கண்களாலேயே ஒருவருக்கு ஒருவர் தெம்பேற்றிக் கொள்கின்றனர். இது இறைச்சித்தம் நிறைவேறும் நேரம் என்பதை உய்த்துணர்ந்து இருவரும் உடலால் ஒதுங்கியிருந்தனர்; ஆனால் உள்ளத்தால் ஒன்றியிருந்தனர்.

யோசேப்பின் வாழ்விலும் உணர்வுகளும், உடல்சார்ந்த ஆசைகளும் உறங்குவதைத்தான் பார்க்கின்றோம். “மரியா தம் மகனைப் பெற்றெடுக்கும் வரை யோசேப்பு அவரோடு கூடி வாழவில்லை” (மத். 1:25) என்று திருவிவிலியம் பதிவு செய்கிறது. கணவருக்குரிய உரிமையையும் உடல் சார்ந்த இன்பத்தையும் யோசேப்பு துறந்தே வாழ்ந்தார் என்பது இதன்மூலம் தெளிவாகத் தெரிகிறது.

இயேசுவிடம் இருந்த பற்றற்ற மனது, அவரது பணி வாழ்வின் தொடக்கத்தில் நிகழ்ந்த அருஞ்செயல் ஒன்றில் நமக்கு வெளிப்படுத்தப்படுகிறது. கானாவூர் திருமணத்தில் திராட்சை இரசம் தீர்ந்து போனதைக் கண்டுணர்ந்த மரியா தாயென்கிற உரிமையைப் பயன்படுத்தி இயேசுவிடம் முறையிடுகிறார். இயேசுவோ “எனது நேரம் இன்னும் வரவில்லையே” (யோவா. 2:4) என்று ஒதுங்குகிறார். எப்போது மரியா “அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” (யோவா. 2:5) என்று இறைவிருப்பத்திற்கும், இறைமகனின் விருப்பத்திற்கும் தம் விருப்பத்தை விட்டுக்கொடுத்தாரோ, அப்போதுதான் அருஞ்செயல் அங்கு அரங்கேறுகிறது.

இயேசு, மரி, சூசை என்பவர்களின் வாழ்வில் பிரதான இடம்பெற்றது, இறைவிருப்பமேயன்றி சுயவிருப்பம் அல்ல; தந்தையின் அலுவலேயன்றி உடல் இச்சைகள் அல்ல. உறவுகளும் உணர்வுகளும் உன்னதமானவை. ஆனால்

இறைவனின் விருப்பமா, நம் விருப்பமா என்று வருகிறபோது நாம் எப்படி நடந்து கொள்கிறோம் எனச் சிந்திப்போம்.

**செபம்**

இறைவா, எங்களுக்காக நீர், வகுத்துள்ள திட்டங்களை நிறைவேற்றிட, எங்கள் விருப்பங்களை விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கை எங்களுக்குத் தாரும்.

◆

✦ ஐந்தாம் நிலை

## பொறுப்புணர்வுடன் கடமையாற்றுவோம்

இயேசுவின் சிலுவையைச் சுமக்க யாருமே முன்வராத நிலையில் ஒரு உழைப்பாளிதான் கடைசியில் கிடைக்கிறான். வயல்வெளியிலிருந்து வந்து கொண்டிருந்த சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் என்பவர்தான் இயேசுவின் சிலுவையை சுமக்க வேண்டியதாயிற்று. வியர்வை சிந்தத் தெரிந்தவனுக்குத் தான் மற்றவர்களின் கண்ணீருக்கும் செந்நீருக்கும் உள்ள வலி புரியும்.

யோசேப்பைப் பற்றி நமக்கு என்ன தெரிகிறதோ, தெரியவில்லையோ, அவர் ஒரு தச்சர், உழைப்பாளி என்பது மட்டும் தெளிவாகவே தெரியும். மரியாவுக்கு மகன் பிறந்ததும் "யோசேப்பு அம்மகனுக்கு இயேசு என்று பெயரிட்டார்" (மத். 1:25) என விவிலியம் கோடிட்டுக் காட்டுகிறது. யூத மரபுப்படி 'பெயரிடுதல்' என்பது தந்தைக்கு மட்டுமேயான உரிமை - கடமைகளை உள்ளடக்கிய உரிமை. தாம் பெயரிடும் குழந்தையை நன்னெறியில் வளர்ப்பதற்கான அனைத்தையும் அந்தத் தந்தை செய்தாக வேண்டும் என்பது நியதி. யோசேப்பு தந்தைக்குரிய அனைத்துக் கடமைகளையும் பொறுப்புடன் நிறைவேற்றினார் என்பதில் யாருக்கும் ஐயம் இருக்க முடியாது.

தம் வானகத் தந்தையிடமும், வளர்ப்புத் தந்தையிடமும் கண்ட அதே பொறுப்புணர்வையும், கடமை தவறா உழைப்பையும் தான் இயேசு கொண்டிருந்தார். எனவேதான் அவர் சொல்லுவார், “என் தந்தை இன்னும் செயலாற்றுகிறார். நானும் செயலாற்றுகிறேன்” என்று. (யோவா. 5:17) அதனைக் கண்ட யூதர்கள் “எப்படி இந்த வல்ல செயல்களைச் செய்கிறார்? இவர் தச்சருடைய மகன் அல்லவா? என்றார்கள்.” (மத். 13:55)

தச்சரின் மகன் என அறியப்பட்ட இயேசுவும், தம் தச்சுத்தொழிலால் இயேசுவின் மீட்புப் பணிக்குத் துணை நின்ற யோசேப்பும் உழைப்பின் மேன்மையை இத்தலத்தில் உணர்த்துகின்றனர். நாம் கடமை வீரர்களா? சோம்பித் திரியும் வெற்று மனிதர்களா? எனச் சிந்திப்போம்.

**செபம்**

இறைவா! உழைப்பின் மேன்மையையும் அவசியத்தையும் உணர்ந்தவர்களாய் பொறுப்புடனும் கடமையுணர்வுடனும் செயலாற்றும் அருள்தாரும்.

◆

✦ ஆறாம் நிலை

## பரிவுடன் பார்க்கப் பழகுவோம்

இயேசுவின் சிலுவைப்பாதையின்போது அவரைப் பரிகாசமாய்ப் பார்த்தவர்கள் ஏராளம். ஆனால் பரிவோடு பார்த்தவர்களுள் முதன்மையானவர் வெரோனிக்கா. அவரது பரிவு, பார்வையோடு நின்றுவிடவில்லை; செயலாக்கம் பெறுகிறது. விரைந்து சென்று இயேசுவின் இரத்தம் கசிந்தத் திருமுருகத்தைத் துகிலால் துடைக்கிறார். அத்தகைய படைப்பாற்றல் மிக்க பரிவுள்ளத்தைத்தான் யோசேப்பின் வாழ்விலும் நம்மால் பார்க்க முடிகிறது.

“அவர்கள் கூடி வாழும் முன் மரியா கருவுற்றிருந்தது யோசேப்புக்கு தெரிய வந்தது” (மத். 1:18,19) என்றுரைக்கும் திருவிவிலியம் “அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார்” என்பதையும் சேர்த்தே சொல்லுகிறது. ‘நீதிமான்’ என்று அறியப்பட்ட அவரது அப்பழுக்கற்ற நற்பெயருக்கே ஊறு விளைவிக்கக்கூடிய அந்தச் சூழலிலும் யோசேப்பு பரிவோடு செயல்படுவதைப் பார்க்கிறோம். மறைவாக விலக்கிவிட முனைந்த யோசேப்புக்கு நன்றாகத் தெரியும் அதனால் அவருக்கு ஏற்படக்கூடிய அவப்பெயரும் பொல்லாப் பேச்சும். ஆயினும் யோசேப்பு உள்ளத்தில் மட்டுமல்ல, செயலிலும் பரிவுள்ளவராய்த் திகழ்ந்தார்.

அவரது வளர்ப்பு மகன் இயேசுவின் பரிவான செயல்பாடுகள் விவிலியம் முழுவதும் விரவிக்கிடந்தாலும், ஒரு குறிப்பிட்ட இறைவசனம் அதனை உரக்கச் சொல்கிறது. இயேசுவும் அவரது சீடர்களும் ஓய்வெடுக்க நினைக்கின்றனர். அப்போது பெருந்திரளான மக்கள் அவர்களைத் தொடர்வதை இயேசு கண்ணோக்குகிறார். “அவர்கள் ஆயரில்லா ஆடுகள் போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவு கொண்டு அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார் (மாற். 6:34) என விவிலியம் கூறுகிறது. தம் தேவையைக் காட்டிலும் மக்களது தேவையை நிவர்த்தி செய்வதே தம் தலையாயக் கடமையென செயலாற்றிய இயேசு, அதற்கான பாலபாடத்தை தம் தந்தையிடமிருந்துதான் கற்றிருக்க வேண்டும். நாம் எப்படிப்பட்டவர்கள்? வெரோனிக்காவுக்கும், யோசேப்புக்கும், இயேசுவுக்கும் இருந்த பரிவு நம்மிடம் உண்டா? அதற்கு செயலாக்கம் கொடுக்கும் துணிவு நம்மிடம் உண்டா? எனச் சிந்திப்போம்.

## செபம்

இறைவா! பிறரைப் பரிவோடு பார்க்கின்ற தயையுள்ள பார்வையையும், செயல்படுகிற துணிவையும் எங்களுக்குத் தந்தருளும்.

# இமைகொட்டாது விழித்திருக்கப் பயிலுவோம்

அடுத்தடுத்த சறுக்கல்களும், தொடர் தோல்விகளும் ஒருவரை சலிப்படையச் செய்தாலும், சோர்ந்து போகாமல், யார் எழுந்து நடக்கிறார்களோ அவர்கள்தான் வெற்றியாளர்கள் ஆகின்றனர். இயேசு ஒரு வெற்றியாளர். எனவேதான் இரண்டாம் முறை விழுந்தாலும், எழுந்து நடந்தார்.

புனித யோசேப்பு எழுந்த இரண்டாவது தருணம் ஒன்றை திருவிவிலியம் விவரிக்கின்றது. குழந்தையின் பிறப்பை அறிந்த ஏரோது, பொறாமையாலும், கடுஞ்சினத்தினாலும் குழந்தையைக் கொல்லத் துடித்துக் கொண்டிருந்தபோது "யோசேப்பு எழுந்து குழந்தையையும், அதன் தாயையும் கூட்டிக்கொண்டு இரவிலேயே எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றார்." (மத். 2:14) பிறந்திருக்கும் குழந்தை கடவுளின் மகன் என்பது யோசேப்புக்குத் தெரியும். கடவுள் பார்த்துக் கொள்வார் என்றோ, காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்றோ அவர் கண்ணயர்ந்து உறங்கியிருக்க முடியும். ஆனால், அவர் இரவோடு இரவாக இடையைக் கட்டிக்கொண்டு, இமை கொட்டாமல் தமக்கு இடப்பட்ட பணியை நிறைவேற்றினார்.

கடவுளின் மகனாம் இயேசுவும் இரண்டாம் முறை சோதிக்கப்பட்டார். கடவுளும் அவருடைய தூதர்களும் பார்த்துக் கொள்வார்கள். நீர் மேலிருந்து கீழே குதியும் என்பதுதான் அலகை விரித்த வலை. "உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம் எனவும் எழுதியுள்ளதே" (மத். 4:7) எனக் கூறி இயேசு சோதனையை வென்றார்.

எந்த ஒரு கடின உழைப்பையும் மேற்கொள்ளாமல், தொடர் முயற்சியில் ஈடுபடாமல், நேர்ச்சைகளை மட்டும் செய்துவிட்டு கடவுள் பார்த்துக் கொள்வார் என சோம்பித்

திரியும் நமக்கு யோசேப்பும் இயேசுவும் கற்றுத் தரும் பாடம் இதுதான்: இமை கொட்டாது விழித்திருந்து போராடுவோம். நம்மால் முடிந்ததைச் செய்வோம்; எஞ்சியதை இறைவன் பார்த்துக் கொள்வார். நாம் விழித்திருந்து உழைப்பவர்களா? அல்லது தட்டிக் கழிப்பவர்களா? எனச் சிந்திப்போம்.

**செபம்**

இறைவா! இமை கொட்டாது கருத்தாய் உழைக்கவும், அதன்பின் அனைத்தையும் கடவுளிடம் அர்ப்பணிக்கவும் எங்களுக்கு பயிற்சி தாரும்.

◆

✦ **எட்டாம் நிலை**

# செயல்படும் விசுவாசத்தை நமதாக்குவோம்

தம்மைப் பார்த்துக் கண்ணீர் வடித்த எருசலேம் மகளிர் பக்கம் திரும்பி இயேசு சொன்னார். "எனக்காக அழ வேண்டாம்; உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்று. அதன் உட்பொருள் என்ன? வெறுமனே அழுவதால் எந்தப் பயனும் இல்லை. "செயலற்ற விசுவாசம் செத்த விசுவாசம்."

யோசேப்பு எப்போதுமே செயல்பட்டுக் கொண்டிருந்ததையே நம்மால் காண முடிகிறது. மரியாவை ஏற்றுக்கொள்ளத் துணிந்த யோசேப்பு கணவனுக்குரிய அனைத்துக் கடமைகளையும் சிரமேற்கொண்டு செய்கிறார். "தாவீதின் வழிமரபினரான யோசேப்பு... மரியாவோடு.. பெயரைப் பதிவு செய்ய... பெத்லகேம் என்ற ஊருக்குச் சென்றார்." (லூக். 2:4,5) அதற்குப் பின் அவர் எப்போதுமே சுழன்றுகொண்டேதான் இருந்தார். பெத்லகேமில் இடம் தேடுவது, எகிப்துக்கு புலம் பெயர்வது, அங்கிருந்து மீண்டும் திரும்புவது, எருசலேமுக்குச் சென்று திருச்சட்ட வழிமுறைகளை நிறைவேற்றுவது என அனைத்தையும் பாங்குடன் நிறைவேற்றும் ஒரு கணவனாக, தந்தையாக, நேரிய குடிமகனாக, நெறிபிறழா யூதனாகத்தான் யோசேப்பு திகழ்ந்தார்.

அவரது வளர்ப்பு மகன் இயேசுவிடமும் நாம் இதே குணநலனைத்தான் காண்கிறோம். அவரது போதனையைக் கேட்க பாலை நிலத்தில் தங்கிவிட்ட மக்கள் வட்டத்தை, உணவு வாங்கிக்கொள்ள அனுப்பி விடுமாறு சீடர்கள் சொன்னபோது "அவர்கள் செல்ல வேண்டியதில்லை. நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" (மத். 14: 15,16) என்று சொன்னார். சொன்னவர் செய்தும் காட்டினார். ஐந்து அப்பங்களைக் கொண்டு ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு உணவளித்தார். செயல்பட்டால்தான் அது விசுவாசம்; இல்லையேல் வெளிவேசம்.

சிலுவை வரைவதிலும், செபமாலை அணிவதிலும், காவி உடுத்துவதிலும், கால்நடையாய் திருத்தலங்களுக்குச் செல்வதிலும் உள்ள ஆர்வம் கத்தோலிக்க விசுவாசத்திற்கு ஏற்ற வாழ்வு. வாழ்வதிலும், சான்று பகரக்கூடிய செயல்களைச் செய்வதிலும் நமக்கு இருக்கிறதா? எனச் சிந்திப்போம்.

### செபம்

இறைவா! எங்கள் நற்செயல்கள் மூலம், எங்கள் ஒளி மனிதர் முன் ஒளிரவும், அதனால் நீர் மகிமை பெறவும் எங்களுக்கு உதவிடும்.

◆

## ✦ ஒன்பதாம் நிலை

# இறைவழியில் பயணிக்கப் பழகுவோம்

மூன்றாம் முறை விழுகிற இயேசு நமக்கு ஒன்றைச் சொல்லித் தருகிறார். விழுவதில் தவறும் இல்லை; அவமானமும் இல்லை. ஆனால் யார் காலில் விழுகிறோம்? எதற்காக விழுகிறோம் என்பதில்தான், நாம் விழுவது முளைப்பதற்கா அல்லது மக்கிப் போவதற்கா என்பது தெரியும்.

இயேசுவுக்கு அலகையிடமிருந்து வந்த மூன்றாவது சோதனை இதுதான். "உலகம் அனைத்தையும் உனக்கு

அடிபணியச் செய்வேன், நீ எனக்கு அடிபணிந்தால்'' என்றது அலகை. இயேசு அதனைப் பார்த்து "அகன்றுபோ சாத்தானே! உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணிசெய் எனவும் மறை நூலில் எழுதியுள்ளது என்றார்'' (மத். 4:10). அன்றைய சோதனையிலும், இன்றைய சோதனையிலும் இயேசு மீண்டு எழுந்தது தந்தையாம் கடவுளுக்கு மட்டுமே பணிந்து, அவர் வகுத்த வழியில் பயணிக்கப் பழகி யிருந்ததால்தான்.

புனித யோசேப்பும் அத்தகைய மனநிலையோடு வாழ்ந்து வந்தவர்தான். மூன்றாம் முறை எழுந்த யோசேப்பு எதற்காக விழித்தெழுந்தார் தெரியுமா? விவிலியம் சொல்கிறது. "யோசேப்பு எழுந்து குழந்தையையும், அதன் தாயையும் கூட்டிக் கொண்டு... கனவில் எச்சரிக்கப்பட்டு.. நாசரேத் எனப்படும் ஊருக்குச் சென்று அங்குக் குடியிருந்தார்.'' (மத். 2:21-23) இப்படி, எத்தனை திருப்பங்கள் இருந்தாலும், எத்தனை அலைக்கழிப்பு இருந்தாலும், தான் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியையும் இறைச்சித்தம் நிறைவேறும் வண்ணமும், மறைநூலில் எழுதப்பட்டவை நிறைவேறும் வண்ணமுமே எடுத்து வைத்தார்.

ஆனால் நாமோ, நாம் திட்டமிட்டபடி காரியங்கள் நடக்கவில்லையென்றாலோ, நினைத்தது கைகூடவில்லையென்றாலோ, அடுத்த கணம் சலிப்படைந்து மாற்றுச் சபைகள் நோக்கிச் செல்லவும், மந்திர தந்திரங்களை நாடவும் சற்றும் தயங்குவதில்லை. "உன் கடவுள் நாமே! நம்மைத் தவிர வேறு கடவுள் உனக்கு இல்லாதிருப்பதாக' என்கிற கட்டளை நமக்கு நினைவில் இருக்கிறதா, இல்லையா எனச் சிந்திப்போம்.

### செபம்

இறைவா, உம்மையே பணிந்து, உமக்கு மட்டுமே ஊழியம் புரிந்து, உம் வழியில் பயணிக்கும் திடத்தினை எங்களுக்குத் தந்தருளும்.

✦ பத்தாம் நிலை

# உரிமைகளைக்கூடத் துறக்கத் துணிவோம்

அனைத்தையும் அழகுறப் படைத்தவர் ஆடையின்றி அவமானப்பட்டு நிற்கின்றார். அகிலத்தின்மீதும், அதிலுள்ள அனைத்தின் மீதும் உரிமை கொண்டாடத் தகுதி படைத்தவர் தன் சுய மரியாதையையும் துறந்து நிற்கின்றார்.

புனித யோசேப்பின் வாழ்க்கையை எடுத்துக்கொண்டால், அது ஒரு துறவு வாழ்க்கையாகவே அமைந்தது. பன்னிரண்டு வயதில் காணாமல் போன இயேசுவைக் கண்டடைந்த யோசேப்பு முற்றிலும் மகிழ்வதற்குக் கூட முடியவில்லை. ஏன் இப்படிச் செய்தாய் எனக் கேட்ட மரியாவுக்கு இயேசு சொன்ன பதில், “நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?” (லூக். 2:49) இத்தகைய பதில் எந்தத் தந்தையையும் கோபப்பட வைத்திருக்கும். தந்தையின் நிலையிலிருந்து ஆற்ற வேண்டிய அனைத்து அலுவல்களையும் அயராது ஆற்றி வந்த யோசேப்புக்கு இயேசுவைக் கண்டிக்கவும், கடிந்து கொள்ளவும், ஏன் தண்டிக்கவும் கூட உரிமை இருந்தது. ஆனால் யோசேப்பு அமைதி காத்தார்.

உறவுகள் மீது கூடத் தன் உரிமையை நிலைநாட்டத் துடிக்காத யோசேப்பின் வளர்ப்பில் உருவான இயேசு அதே துறவு மனநிலையில்தான் வாழ்ந்து வந்தார். அதனால்தான் ஒருமுறை அவரது தாயும் உறவினரும் அவரைக் காண வந்தபோது “என் தாயும் என் சகோதரரும் யார்?... கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும், சகோதரியும், தாயும் ஆவர் என்றார்.” (மாற். 3:33,35)

உறவுகளின் நெருக்கம் மிக முக்கியமானது. ஆனால் அதைவிட முக்கியமானது உறவுகளைக் கொடுத்த கடவுளின் அலுவல். வானகத் தந்தையின் அலுவல் என வந்துவிட்டால்

மண்ணக உறவுகள் சற்று வழிவிடத் தான் வேண்டும் என்கிற பாடத்தை இயேசுவும் யோசேப்பும் நமக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அனைத்தையும் அனுபவிக்க வேண்டும் என்கிற நுகர்வுக் கலாச்சாரத்திற்கு அடிமையாகிப் போன நமக்கு ஆடைகளையப்பட்டு நிற்கும் இயேசு ஒரு சவால். நாம் இறுக்கமாய்ப் பிடித்துக் கொண்டிருக்கும் உடைமைகளையும், உறவுகளையும் கடவுளுக்காக துறக்க மனமுள்ளவர்களா, அல்லது அவற்றிற்காக கடவுளை விட்டுக் கொடுக்கிறவர்களா நாம் என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.

### செபம்

இறைவா! நீர் எங்களுக்காக உருவாக்கித் தந்துள்ள உறவுகளை உம்முடைய மனதுடன் நேசிக்கவும், அதே உறவுகள் உம்மைப் பின்பற்றுவதிலும் உமக்குப் பணிபுரிவதிலும் இடறலாய் அமையும்போது அவர்களைத் தாண்டி உம்மை நேசிக்கவும் எங்களுக்கு அருள்தாரும்.

◆

✦ பதினொன்றாம் நிலை

## அசைவுறா பற்றுறுதியை நமதாக்குவோம்

ஆசியளித்த கரங்களையும், நற்செய்தி அறிவிக்க அலைந்து திரிந்த கால்களையும், அசைவுறா வண்ணம் ஆணிகளால் அறைகிறார்கள். இயேசுவின் உடலைத்தான் அவர்கள் கட்டுக்குள் கொண்டுவர முடிந்ததேயன்றி, அவரது மனதையல்ல.

சிலுவைப்பாடுகளின் போது மட்டுமல்ல, அதைப்பற்றிய முன்னறிவிப்புகளின் போதும்கூட இயேசு கலக்கமுற்றார் என்பதை மறுப்பதற்கில்லை. “என் உள்ளம் கலக்கமுற்றுள்ளது. நான் என்ன சொல்வேன்? தந்தையே! இந்த நேரத்திலிருந்து என்னைக் காப்பாற்றும் என்பேனா? இல்லை, இதற்காகத்தானே

இந்நேரம் வரை வாழ்ந்திருக்கிறேன்'' (யோவா. 12:27) என ஒருமுறை அவர் சொன்னதாக விவிலியத்தில் பார்க்கிறோம்.

இப்படி ஒவ்வொரு முறை அவர் உடல் சோர்வுற்றபோதும், மனம் தளர்வுற்ற போதும் அவர் இறுகப்பற்றிக் கொண்டது தம் தந்தையைத்தான்; தந்தையின் திருவுளத்தைத்தான்.

யோசேப்பின் வாழ்விலும் அவரை நிலைகுலையச் செய்யும் பல விபரீதங்கள் ஏற்படவே செய்தன. மரியா கருவுற்றிருக்கிறார் என்கிற செய்தி முதல் அடி என்றால் பெத்லகேம் நோக்கிய அவர்களது பயணம், சத்திரத்தில் இடம் இல்லாமல் போனது, மாட்டுக் கொட்டகையே பிறப்பிடமாய் அமைந்தது, பிறந்த குழந்தையைக் காப்பாற்ற எகிப்துக்கு அகதியாய் செல்ல நேரிட்டது, ஏரோதின் மரணத்திற்குப்பின் நாசரேத்தில் குடியேறியது, கைநோகப் பணி செய்து, கால்கடுக்க உழைத்து கண்மணிபோல இயேசுவை வளர்த்தெடுத்தது, பன்னிரண்டு வயதில் இயேசுவை, தொலைக்க நேர்ந்தது என அடுக்கடுக்கான சோதனைகளும், வேதனைகளும் அவரைப் பதம் பார்த்தன. "போதுமடா சாமி'' என அவர் ஒதுங்கிப் போயிருக்கலாம். ஆனால் "ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர்... தம் அலுவல்களில் நீதியுடன் செயல்படுவர். என்றென்றும் அவர்கள் அசைவுறார்... (தி.பா. 112:1,5,6) என்கிற திருப்பாடல் வரிகளுக்கு ஏற்ப யோசேப்பு நிலைபெயராது இருந்தார். சிலுவையில் அறையுண்ட இயேசு அசைவுறா மனஉறுதியுடன் இருந்தது போலவும், புனித யோசேப்பைப் போலவும் நாம் அசைவுறா நெஞ்சுரம் கொண்டவர்களா, அல்லது தடுமாறும் மனம் உடையவர்களா எனச் சிந்திப்போம்.

## செபம்

இறைவா, துயரத்தின் மத்தியிலும் மனந்தளரா நம்பிக்கையுடனும், அசைவுறா பற்றுறுதியுடனும் தந்தையின் திருவுளத்தை நாடுகிற நல்மனதை எங்களுக்குத் தந்தருளும்.

◆

# பரிந்து பேசும் பரந்த மனம் பெற்றிடுவோம்

எதிரிகளை வீழ்த்துவதையும் தண்டிப்பதையும் மட்டுமே பார்த்திருந்த உலகம், பகைவர்களுக்காக பரிந்துபேசும் அதிசயத்தை முதன்முறையாய் பார்த்தது. தன்னைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காகவும், அதற்குக் காரணமானவர்களுக்காகவும் "தந்தையே இவர்களை மன்னியும்" என இயேசு பரிந்து பேசுகிறார். எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் இதனை அழகாக விவரிக்கிறது. "அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில்... உரத்த குரல் எழுப்பி, கண்ணீர் சிந்தி மன்றாடி வேண்டினார்... கடவுள் அவருக்கு செவி சாய்த்தார்." (எபி. 5:7)

கடவுளைக் கூட சுயநலத்தோடு அணுகுபவர்கள் நாம். ஆபத்து நேரத்திலும், அவசரங்களில் மட்டுமே அவரை நாடுவதும், எஞ்சிய நேரங்களில் அவரை மறந்து வாழ்வதுமே நமது வாடிக்கை. தவறாமல் செபிக்கிறவர்கள்கூட தமக்காகவும், தம் குடும்பத்திற்காகவும், மிஞ்சிப்போனால் தங்கள் நண்பர்களுக்காகவும் நலன் விரும்பிகளுக்காகவும் தான் மன்றாடுவார்கள். ஆனால் இயேசுவோ, தாம் சாகும் தருவாயிலும் பிறருக்காக மன்றாடும் பரந்த மனம் படைத்தவராய்த் திகழ்ந்தார்.

யோசேப்பிடமும் பரிந்து பேசும் பண்பு இருந்ததை வரலாறும் பாரம்பரியமும் நமக்கு உணர்த்துகின்றன. "யோசேப்பிடம் கேட்டு நான் பெறாமல் போன நன்மை எதுவுமில்லை" என அவிலா தெரசா தொடங்கி எத்தனையோ புனிதர்கள் வாக்குமூலம் தந்துள்ளனர். "யோசேப்பிடம் செல்லுங்கள்" என்கிற பழைய ஏற்பாட்டு வசனம் புதிய ஏற்பாட்டின் மக்களாகிய நமக்குமே ஏற்புடையதுதான். ஏனென்றால் புனித யோசேப்பு நமக்கு அருள்வரங்களையும், விண்ணகக் கொடைகளையும் அள்ளித்தரும் தந்தையாகவே

உள்ளார். திருவிவிலியம் கூறுவது போல "ஆண்டவரின் கண்கள் நீதிமான்களை நோக்குகின்றன. அவர் செவிகள் அவர்களது மன்றாட்டைக் கேட்கின்றன." (தி.பா. 34:15)

இயேசு சாகும் தருவாயிலும் பிறருக்காகப் பரிந்து பேசினார். யோசேப்பு இறந்த பின்னும் அனைவருக்காகவும் பரிந்து பேசுகிறார். நமக்கு பரிந்து பேசுகிற பரந்தமனம் உள்ளதா? எனச் சிந்திப்போம்.

**செபம்**

இறைவா, எல்லாச் சூழலிலும் உமக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்கும் நல்மனதையும், பிறருக்காக பரிந்து பேசுகிற பரந்த மனதையும் எங்களுக்குத் தந்தருளும்.

◆

✦ பதின்மூன்றாம் நிலை

# நிறைவாக வாழ்ந்து நல்மரணம் அடைவோம்

சிலுவைப்பாதையின் இந்தத் தலத்தை ஒருவித வியாகுலத்தோடே தியானித்து பழகிவிட்டோம். ஆனால் உண்மையில் இந்தத்தலம் நிறைவான வாழ்வு வாழ்ந்த இருவரை நம் கண்முன்பாக நிறுத்துகிறது. முப்பத்து மூன்றே ஆண்டுகள் வாழ்ந்திருந்தாலும், தாம் மரணிக்கும் வேளையில் "எல்லாம் நிறைவேறிற்று" (யோவா. 19:30) "தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" (லூக். 23:46) என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிறைவாழ்வு வாழ்ந்த இயேசு அந்த இருவருள் ஒருவர்.

அவரது இறந்த உடலைத் தாங்கிய மரியா மற்றொருவர். ஏற்கனவே கணவனை இழந்து, இப்போது தன் ஒரே மகனையும் இழந்து தவித்த அந்தத் தாய் "எல்லாம் முடிந்து விட்டது" என முடங்கிப் போனதாகத் தெரியவில்லை. ஒரு புதிய அவதாரம்

எடுக்கிறார். திருமகனை வளர்த்தெடுத்தது போலவே, சிதறுண்ட திருத்தூதர்களை ஒருங்கிணைத்து, அவர்கள் மூலம் திருஅவையை வளர்த்தெடுக்கும் தாயாக உயர்ந்தார் மரியா. அதனை நிறைவாகச் செய்ததால் இன்றைக்கு "திரு அவையின் அன்னை" என்கிற அடைமொழிக்குச் சொந்தக்காரராய்த் திகழ்கின்றார்.

நிறைவாக வாழ்ந்து நல்மரணம் அடைந்தவர்கள் என்று சொன்னவுடனே நம் நினைவுக்கு வருவது புனித யோசேப்புதான். இந்த உலகிலே யாருக்குமே கிடைத்திருக்க முடியாத நல்மரணப் பேறு யோசேப்புக்குக் கிடைத்தது என நம்பப்படுகிறது. உலக மீட்பர் அருகிருக்க, மீட்பரின் தாய் உடனிருக்க, உபத்திரவம் எதுவுமின்றி உயிர்விடுகிற பாக்கியம் புனித யோசேப்புக்குக் கிட்டியது.

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன. கடுந்தொல்லை எதுவும் அவர்களைத் தீண்டாது" (சா.ஞா. 3:1) என்கிற மறைநூலின் வரிகள் அவரது வாழ்வில் அச்சரம் பிறழாமல் நடந்தேறியது. கணவன் மாதிரி, தந்தை மாதிரி என்று தொடங்கிய யோசேப்பு மாதிரிக் கணவராய், மாதிரித் தந்தையாய் மகிமையுடன் உயர்ந்துநிற்கின்றார். இறைத் தந்தையின் மீட்புத் திட்டத்தில் தங்களுக்குரிய பங்கினை பாங்குடன் நிறைவேற்றிய சேசு, மரி, சூசை மூவருமே நிறைவாழ்வு வாழ்ந்தவர்களாய் நம் கண்முன் ஜொலிக்கின்றனர். நல் மரணம் வேண்டும் என்று ஆசைப்படுகிற நாம் நிறைவாழ்வு வாழ்கிறோமா எனச் சிந்திப்போம்.

## செபம்

இறைவா! எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தோம் என்பதைக் காட்டிலும் எப்படி வாழ்ந்தோம் என்பதுதான் முக்கியம் என்பதை உணர்ந்து, நிறைவாழ்வு வாழ்ந்து நல்மரணம் அடைகிற பேற்றினை எங்களுக்குத் தாரும்.

◆

# நேர்மையாளராய் நற்புகழுடன் ஒளிர்வோம்

இயேசுவுக்கான இறுதிச் சடங்குகள் நிறைவேற்றப்பட்டு விட்டன என்று தான் யூதப் பெரியோர் கூட்டம் கருதியது அப்போது. ஆனால் அந்த நொடியில்தான் புதிய யுகம் ஒன்று பிறந்தது, உலக மீட்பு உதித்தது, வரலாற்றின் வாழ்வுக்காலமே இரு கூறுகள் ஆயின என்பது போகப் போகத்தான் அனைவருக்கும் புரிந்தது.

ஆனால் இயேசுவுக்கு அது எப்போதுமே தெரிந்திருந்தது. எனவேதான் முன்பொருநாள், தன் உடல் மீது நறுமணத் தைலத்தை ஒரு பெண் ஊற்றியபோது “அவர் எனக்குச் செய்தது முறையான செயலே... இவர்... எனது அடக்கத்திற்கு ஆயத்தம் செய்தார். உலகம் முழுவதும் எங்கெல்லாம் இந்நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம்... இவரும் நினைவு கூறப்படுவார்” (மத். 26:10,12,13) என்று இயேசு சொன்னார். தமக்கு அடக்கம் என்று ஒன்று நடக்கும் என்பதை எவ்வளவு உறுதியாக இயேசு அறிந்திருந்தாரோ, அவ்வளவு உறுதியாக அவரது மரணச் செய்தி நற்செய்தியாக மாறும், அது உலகம் முழுவதும் அறிவிக்கப்படும் என்பதையும் அறிந்திருந்தார்.

“விலையுயர்ந்த நறுமணத் தைலத்தை விட நற்புகழே மேல். பிறந்த நாளை விட இறக்கும் நாளே சிறந்தது” (ச.உ..7:1) என்கிற மறை நூல் வாக்கு உலக மீட்பராம் இயேசுவுக்கு பொருந்துவதைப் போலவே நேர்மையாளராம் யோசேப்புக்கும் மிக நேர்த்தியாகவே பொருந்துகிறது. யோசேப்பைக் குறித்த வாழ்க்கைக் குறிப்புகள் நம்மிடம் பெரிதாக இல்லை. ஆனாலும் நற்புகழோடு வாழ்கிற புனிதர்கள் வரிசையில் யோசேப்பு மரியாவுக்கு மட்டுமே இரண்டாமவர். தொழிலாளர்களின் பாதுகாவலர், கன்னியர்களின் பாதுகாவலர், திருக்குடும்பத்தின் பாதுகாவலர், படிக்கும் பிள்ளைகளின் பாதுகாவலர், நல்மரணத்தின் பாதுகாவலர் என அணிவகுத்து நிற்கும் அடைமொழிகள் அனைத்திற்கும் மணி மகுடமாய் அமைவது அவர் உலகளாவிய திரு அவையின் பாதுகாவலர் என்பதாகும்.

திருச்சட்டங்களையும், இறைச்சித்தத்தையும் நெறிபிறழாமல் காத்ததாலும், இறைவனுக்கு அஞ்சி வாழ்ந்த நேர்மையாளர்களில் அவர் தலை சிறந்தவர் என்பதாலும்தான் இத்தனைச் சிறப்புகளோடும், நற்புகழோடும் விளங்குகிறார் புனித யோசேப்பு. நற்புகழோடு வாழ விரும்பும் நாம் யோசேப்பைப் போல அமைதியுடனும், அடக்கத்துடனும் வாழ்ந்து நேர்மையாளராய்த் திகழ்கின்றோமா? எனச் சிந்திப்போம்.

## செபம்

இறைவா, எவ்விடத்தில், எந்நிலையில், எப்படி நாங்கள் பிறந்திருந்தாலும் நற்புகழ் பெற்றிட ஒரே வழிதான் உண்டு - அது நேர்மையாளரின் வழி என்பதை உணர்ந்து வாழ்ந்திடும் அருளினை எங்களுக்குத் தாரும்.

◆

## முடிவுரை

**த**ம்மை அனுப்பிய தந்தையின் அலுவலில் பன்னிரண்டு வயதே ஆன இயேசு இருப்பதை உணர்ந்து கொண்ட யோசேப்பை அதன்பின் நாம் விவிலியத்தில் பார்ப்பதேயில்லை. ஆயினும் இந்தச் சிலுவைப் பாதைச் சிந்தனைகள், எந்த அளவு இயேசுவின் மனநிலையோடு யோசேப்பு தம் வாழ்க்கையில் பயணித்தார் என்பதை எண்பித்திருக்கும். நீதியின் கதிரவனாம் இயேசுவும், நீதிமான் என அழைக்கப்படும் யோசேப்பும் நமக்கு உணர்த்தும் மாபெரும் உண்மை இதுதான். நேர்மையாளரின் பாதை இடர்கள் நிறைந்ததாய் இருக்க நேரிட்டாலும், அவர்களது முடிவு மகிமை நிறைந்ததாகவே அமையும். உயிர்த்த இயேசுவும், உத்தமராய் உயர்ந்து நிற்கும் புனித சூசையப்பரும் உணர்த்துகிற உன்னதப் பாடத்தைப் பயின்றவர்களாய் நம் வாழ்க்கைப் பாதையைத் தொடர்வோம். நீதியில் நிலைத்திருப்பது மிகக் கடினமானதாக இருக்கலாம்; ஆனால் நிலைவாழ்வு என்கிற மகுடம் நிச்சயம் நமக்கு உண்டு.